

உடுமலைப்பேட்டையில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் உடுமலை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் இ.கே.மாரிமுத்து ஏற்பாட்டில் கல்லாபுரம் ஊராட்சி அ.தி.மு.கவைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்டோர் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்பி., கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ஜெயராமகிருஷ்ணன் (மடத்துக்குளம்), மு.ஜெயக்குமார் (உடுமலைப்பேட்டை), கழக ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி உள்ளிட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்ட திமுக நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர் கள் கூட்டம் மாவட்ட கழக அலுவல கமான உதகை கலைஞர் அறிவா லயத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்ட மன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது. தலைமை கழக பிரதிநிதிகள் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் கே.ஈ. பிரகாஷ் எம்.பி., மற்றும் கழக கொள்கை பரப்பு இணை செய லாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் ரவிக்குமார், நாசர் அலி, திராவிடமணி, காசிலிங்கம், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், சேகரன், ரமேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சுயநலவாதிகளின் கைகளில் ஆட்சி சென்றதால் மக்கள் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்!

வெள்ள பாதிப்பிலிருந்து சென்னை மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பீர்!

கண்டனப் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, அக்.17
மக்களை வெள்ள பாதிப்பிலி ருந்து பாதுகாக்க வேண்டும்; அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்; இதை வலியுறுத்தித்தான் இந்த கண் டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகி றது என்று மாவட்டக் கழக செய லாளர் பி.கே.சேகர்பாபு எம். எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

கழகத்தலைவர்மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை கிழக்கு- வடக்கு-வடகி ழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் எல் நினோ தீவிரம் மற்றும் வடகி ழக்குப் பருவமழையால் ஏற்படக் கூடிய அபாயங்களை அலட்சியப்ப டுத்துவதையும், மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் தமிழக அர சின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண் டித்து நேற்று (15.10.2026 வியா ழக்கிழமை) காலை 9.00 மணியளவில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற் றது.

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பொதுமக்கள் பாதிக்கப்ப டாமல் பாதுகாக்கும் வகையில், மழைநீர் வடிகால்களைத் தூர்வா ருதல், கழிவுநீர் கால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற் றிச் சீரமைத்தல், கூவம் ஆற்றின் முகத்துவாரப் பகுதிகளில் நீரோட் டத் தடைகளை அகற்றுதல், மழை நீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் உரிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட அத்தி யாவசியப் பணிகளைப் போர்க் கால அடிப்படையில் விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தியும், மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநக ராட்சி மக்கள் பிரதிநிதிகள் தங்களது மக்கள் நலப் பணிகளைத்தடை யின்றி மேற்கொள்ள வழிவகை செய்ய வலியுறுத்தியும் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமையில் நடை பெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத் தில் கழகத் துணைப் பொதுச்செய லாளரும், நாடாளுமன்ற மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி என்.சிவா எம்.பி. சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலா ளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர். டி. சேகர், கழக அயலக அணித் தலைவர் டாக்டர். கலாநிதி வீரா சாமி எம்.பி. ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

மேலும், இக்கண்டன ஆர்ப்பாட் டத்தில் ஜோசப் சாமுவேல், ப.ரங்க நாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், இ.பரந்தாமன் ஜே.ஜே.எபினேசர் தமிழன் பிரசன்னா, சுபேர்கான் தனியரசு,பி. ஸ்ரீராமுலு,பி.கே. மூர்த்தி, சரிதா மகேஷ்குமார் கூ.பி. ஜெயின் நேதாஜி கணேசன் ஆறு முகம்,இளைய அருணா, சர்பஜெப தாஸ், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, எஸ். ராஜசேகர், எஸ்.முரளி, இசட். ஆசாத், கே.கவியரசு ஆகியோரும்

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் நீலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாநகர மன்ற உறுப் பினர்கள், மாவட்டங்களின் நிர்வா கிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப் பாளர்கள், வட்ட கழகச் செயலாளர் கள், பகுதி/வட்ட கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளா கக் கலந்து கொண்டு கண்டனத் தைப் பதிவு செய்தனர்.



இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம். எல்.ஏ. உரையாற்றியது வருமாறு:-

வங்கக்கடலில் உருவாகக்கூ டிய காற்றமுத்தத் தாழ்வு மண்ட லங்கள், புயல் தாக்கம், எல் நினோ விளைவுகள் காரணமாக இந்த முறை அதிக அளவில் மழை பெய் யக்கூடும் என்று வானிலை ஆய் வாளர்கள் எச்சரித்து வருகின்ற நிலையில், சென்னை மாநக ராட்சியின் பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும், சென்னை மாநக ராட்சியின் மக்கள் நலப் பணிகளை முடக்குகின்ற தமிழக அரசைக் கண்டித்தும் இந்த மாபெரும் கண் டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

சூரியன் என்றாலும், உதயசூரி யன் என்றாலும் திராவிட முன் னேற்றக் கழகம்தான் என்பதை நிரூபிக்கின்ற வகையில், கொளுத் துகின்ற வெயிலுக்கு மத்தியில் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றி ருக்கின்ற உங்கள் அனைவரு டைய பாதம் தொட்டு என்னுடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன் றைக்கு ஜோசப் விஜய் மாடல் அரசு என்பது, திராவிட மாடல் அரசினு டைய கொள்கை, கோட்பாடுகள் நிறைந்த கடந்த ஐந்தாண்டு கால ஆட்சிக்குப் பிறகு, ஒரு சில சுயநல வாதிகளின் கைகளிலே சென்றிருக் கின்ற ஆட்சியாக இருக்கிறது. ஆம்! இன்றைக்குத் தமிழகம் ஒரு சோக காளியிடம் மாட்டிக்கொண்டு, தமி ழக மக்களே சீக்காளிகளாக மாறு கின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தச் சுயந லவாதிகளின் கைகளிலே ஆட்சி சென்றதன் காரணமாக மக்கள் சீர ழிந்து கொண்டிருக்கிறார்கள் என் பது தெளிவாகத் தெரிகிறது.

முறையற்ற செயல்!

இன்றைக்கு இந்த ஆர்ப்பாட்டம் என்பது, தமிழகத்தினுடைய நல னுக்காக, தமிழக மக்களுக்காக, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களுக் காக, எங்கெல்லாம் பாதிப்புகள் ஏற் படுகின்றனவோ அங்கெல்லாம் ஆதரவுக் கரம் நீட்டுகின்ற நம் உயி ரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்களுடைய வழிகாட்டு தலின்படி நடைபெறுகின்ற ஆர்ப் பாட்டம். இந்த ஆர்ப்பாட்டத்தை அறிவித்த பிறகுதான், சென்னை மாநகராட்சியில் நேற்றைக்கு ஆலோசனைக் கூட்டம் என்று சட்ட மன்ற உறுப்பினர்களையும், ஏழு அமைச்சர்கள் கொண்ட குழுவை யும் அழைத்து மாநகராட்சியில் ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். நேற்றைக்குஅந்தக்கூட்டத்திலேயே நான் எடுத்துரைத்தேன். இந்த மாநகராட்சியினுடைய ஜீவநாடி, உயிர்நாடி என்று சொன்னால், மண்டலக் குழுத் தலைவர்களும் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் களும்தான். மண்டலக் குழுத் தலைவர்களை அழைக்காமல் இப் படியொரு கூட்டத்தை நடத்துவது முறையற்ற செயல் என்பதை அவர்கள் முன்னிலையிலேயே எடுத்துரைத்தேன்.

அதேபோல், 300 ஆண்டுக ளுக்கும் மேலான வரலாற்றுப் பெருமை கொண்ட சென்னை மாநகராட்சியில், திராவிட முன் னேற்றக் கழகத்தின் கடந்தகால ஆட்சியில்தான் 1,200 கிலோமீட்டர் அளவிற்கு மழைநீர் வடிகால்களை அமைத்துத் தந்திருக்கிறோம்.

நேற்றைக்கு அமைச்சர்கள் கூட் டத்திலேயே இதைத் தெரிவித்தேன்.

2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் தேதி, புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டங்களில் தமது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, அன்றிரவு திருச்சியிலிருந்து விமா னம் மூலம் சென்னை திரும்பிய அ ன் ற ய தமிழ்நாடு முதலமைச்சர், நம்முடைய கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தென் சென்னை மாவட்டக் கழகச் செய லாளரும் அமைச்சருமான மா.சுப் பிரமணியன் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "நான் நேராக மாநக ராட்சி அலுவலகத்திற்கு வருகி றேன்" என்று தெரிவித்தார்.

இந்தத் தகவல் எனக்குக் கிடைத் தவுடன், நானும் உடனடியாக மாந கராட்சி அலுவலகத்திற்குச் சென் றேன். அவர் மாநகராட்சிக்கு வந்தபோது பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டிருந்தன. அன்றைக்கு ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். "அடுத்த ஆண்டு பெருமழை பெய்யும்போது, நான் இந்த மாநகராட்சிக்கு வருகிற நேரத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடத் தேங்கி நிற்கக்கூடாது" என்று அறிவுறுத்தினார். அதற்காக ஐந்து லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் சேமிப்புத் தொட்டியை அமைத்து, அந்தத் தொட்டிக்கு வருகின்ற நீரை நீ ரேற்று நிலையத்துடன் இணைத்து வெளியேற்றுவதற் கான பணிகளை மேற்கொண் டோம். கடந்த நான்கு ஆண்டுக ளில் பல்வேறு கனமழைகளைச் சந்தித்தபோதும், மேற்கொள்ளப் பட்ட மழைநீர் வடிகால் பணிக ளால் பல பகுதிகளில் தண்ணீர் தேங்குவது குறைக்கப்பட்டது என் பதை நேற்றைய கூட்டத்திலேயே எடுத்துரைத்தேன். இதுதான் மக்க ளுக்காகச் செயல்படுகின்ற ஓர் அர சின் நிர்வாகத் திறமை என்று தெரி வித்தேன்.

போராட்டம் அறிவித்த பின் த.வெ.க. அரசு நடவடிக்கை!

ஆனால், தூங்கிக்கொண்டிருந்த ஜோசப் விஜய் தலைமையிலான அரசு, நம்முடைய கழகத் தலை வர் இந்தப் போராட்டத்தை அறி வித்தவுடன், இன்றைக்கு மழைநீர் கால்வாய்களைச் சென்று பார்வை யிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக் கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அக்டோபர் மாதத்திற் குள்ளாகவே மழைநீர் வடிகால்க ளில் இருக்கின்ற சுமார் ஒரு லட் சத்து அறுபதாயிரம் வண்டல் வடிகட்டும் தொட்டிகளின் மூடிக ளைத் திறந்து, தேவையான இடங் களில் கான்கிரீட் சாலைகளை உடைத்து, தூர்வாருகின்ற பணி களை மேற்கொண்டோம்.

மழைக்குப் பிறகு டிசம்பர் மாதத் திலும் மீண்டும் ஒருமுறை தூர்வா ருகின்ற பணிகளை மேற்கொண் டோம். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற அரசு என்ன செய்திருக் கிறது? 3,200 கிலோமீட்டர் அள விற்கு மழைநீர் வடிகால்கள் இருக் கின்ற சென்னை மாநகராட்சியில், வெறும் 1,200 கிலோமீட்டர் மட் டுமே தூர்வாரியிருந்தால், மக்க ளுக்கு ஏற்படுகின்ற வெள்ளப் பாதிப்பை எப்படி உங்களால் தடுக்க முடியும்? என்று நேற்றைக்கு நடை பெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே கேள்வி எழுப்பி னேன்.

மழைநீர் வடிகால்களை முழு மையாகத் தூர்வார வேண்டும்! மழைநீர் தடையின்றிச் செல்வதற் கான இணைப்புகளை ஏற்படுத்த வேண்டும்! மக்களை வெள்ளப் பாதிப்பிலிருந்து பாதுகாக்க வேண் டும்! அதற்கான அனைத்து முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை யும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்! இதை வலியுறுத்தித் தான் இன்றைக்கு இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திக்கொண்டி ருக்கிறோம். நான் பேசும்போது ஒருவருக்குப் போர் அடிக்கிறதாம்! உங்களுக்குப் போர் அடிக்காமல் இருப்பதற்கு நான் என்ன சுறா படத் தையா போட்டுக் காட்ட முடியும்?

முத்தமிழறிஞர் வழியில் பயணிக்கும் இயக்கம்!

ஆட்சியில் இருந்தாலும், இல்லா விட்டாலும் மக்களுக்கு நன்மை செய்கின்ற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்! எதிர்க்கட்சி யாக இருந்தாலும் தகுந்த ஆலோச னைகளை வழங்குங்கள் என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா அவர் கள் கூறியிருக்கிறார். நாங்கள் ஆலோசனைகளை வழங்கத் தயா ராகத்தான் இருக்கிறோம். மக்களு டைய நலனுக்காக எந்த நேரத்தி லும் குரல் கொடுக்கின்ற இ ய க் க ம் தான் தி ரா வி ட முன்னேற்றக் கழகம். அதேநேரத் தில், மாநில உரிமைகள் என்று வருகின்றபோது, திராவிட முன் னேற்றக் கழகம் என்றைக்கும் அ ந் த உ ரி மை க ளை விட்டுக்கொடுக்காது! என்றும் நம் முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் காட்டிய வழி யில் பயணிக்கின்ற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்!

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகள், அதா வது எஸ்.ஐ.ஆர். பணிகள் தொடர் பாக நம்முடைய கழகத் தலைவர் நீலிக்கண்ணீர் வடிப்பதாக அமைச் சர் ஆ த வ் அ ர் ஜு னா கூறியிருக்கிறார். நான் கேட்கி றேன்! அனைத்துக் கட்சிக் கூட்டத் தைக் கூட்டினோம்! சட்டமன்றத் தில்தீர்மானம்நிறைவேற்றினோம்! வாக்காளர்களுடைய உரிமைக ளைப் பாதுகாப்பதற்காகப் பல் வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டோம்! இத்தனை நடவடிக்கைகளையும் மேற் கொண்ட பிறகும், எங்களுடைய தலைவரின் செயல்பாட்டை நீலிக் கண்ணீர் என்று விமர்சிப்பது எந்த வகையில் நியாயம்? மக்களுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுப் பது நீலிக்கண்ணீர் அல்ல! அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடமை உணர்வு!

விண்ணிலிருந்து மண்ணிற்கு மழைத்துளி வந்து சேர்வதற்கு முன்னால் மண்ணில் வாழ்கின்ற மக்களை சந்தித்து நிவாரணமும் ஆறுதலும் வழங்கியவர் எங்கள் திராவிட மாடல் நாயகர் மக்களின் வலி தீர்க் கும் மாமருந்தாய் அவ ருக்கு தோள் கொடுப்பவர் எங்கள் எதிர்க்கட்சித் தலை வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த ஆர்ப்பாட் டம் இன்று இறுதியல்ல இது போன்று தொடர்ந்து மக்கள் பிரச்சனைகளுக்காக பல கட்டங்களாக ஆர்ப்பாட்டங் கள் தொடரும் பாஜக எதிர்ப்பு என்று வந்தவுடன் பனையூ ரில் சென்று பதுங்குவோர் போல அல்ல எங்கள் தலை வர்.

உறவுக்கு கை கொடுப் போம் உரிமைக்கு குரல் கொடுப்போம் என்றும் திரா விட முன்னேற்ற கழகம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான பி.கே. சேகர்பாபு பேசினார்.

கலாமுக்கு சலாம்!

சேதுக் கரையில்
உதித்த
தமிழன்...

ஷில்லாங்கில்
மரித்த
புனிதன்...

தென்கோடிக்
கடற்கரையில்
ஜனனம்..

தேசியக் கொடி
போர்த்திய
சந்தனப்
பேழையில்
பயணம்..

நீர் சூழ்ந்த
கர்ப்பப்பையில்
வந்த
நெருப்புக்
கோளம்

வானம்பார்த்த
பூமியில்
வந்துதித்த
ஞானக்
குழந்தை...

திண்ணைக்
கூடத்து
பள்ளிப்
படிப்பிலும்
விண்ணைத்
தொட்ட
வெற்றித் திருமகன் ..

சேதுபதிச் சீமை
கண்டெடுத்த
சிப்பிக்குள் முத்து..

இந்நாட்டு
அறிவியலை
தென்னாட்டுப்
பக்கம்
திருப்பிக்



காட்டிய
திறமைகளின்
கெத்து..

வறண்டமண்ணில்
வந்துதித்த
ஏவுகணைத்
தமிழன்..

அகண்ட
விஞ்ஞானத்தின்
ஆழம்பார்த்த
எளிமையின்
புதல்வன்...

அணுவைத்
துளைத்த
கையோடு
குறுகத்தரித்த
குறளையும்
பொழுதெல்லாம்
பாடிக்களித்த
பொக்ரான் புலவன்...

அணுவிஞ்ஞானம்
ஆன்மீக
மெய்ஞானம்

இரண்டும்
கலந்த
அறிவியல்
தமிழால்

பார்வியக்க
வைத்த
பாரதரத்னா..

நபிவழி நடந்து
நடராஜர்
பெருமையும்
அறிந்து

குரானும்
குறளும்
பைபிளும் என
சகலமும்
நேசித்த
சமத்துவ
விஞ்ஞானி..

மெழுகுவர்த்தி
கையில் ஏந்தி.
குங்குமம் இட்டு
குத்துவிளக்கு
ஏற்றி

அகிலம்
அதிசயித்த
அப்துல்கலாம்...

ஆதலாலே
மதங்களைக்
கடந்து
மனிதகுலம் வைக்கிறது
அவருக்கு
அன்புச்சலாம்



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

செஞ்சி அருகே 4 நாட்களாக மாயமான

7 வயது சிறுமியின் பெற்றோருக்கு - முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் ஆறுதல்!

செஞ்சி, அக். 17 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த ஆலம் பூண்டி ஊராட்சி நடுப் பட்டு கிராமத்தைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஹேமாவதி கடந்த 12ஆம் தேதி வீட் டில் தூங்கிக் கொண்டிருந் தபோது மாயமானார். சிறுமி மாயமாகி 4 நாட்கள் ஆகியும் இதுவரை எந்த துப்பும் கிடைக்காததால் போலீசார் தீவிர விசா ரணை நடத்தி சிறுமியை தேடி வருகின்றனர்.

இந்நிலையில் சிறுமியின் வீட்டிற்கு நேரில் சென்ற விழுப்புரம் வடக்கு மாவட் டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் தெரிவித் தார்.

தொடர்ந்து சம்பவ இடத்தில் இருந்த செஞ்சி டி.எஸ்.பி. ரமேஷ் ராஜிடம் இச்சம்பவம் குறித்து கேட் டறிந்த அவர், காவல்துறை யினர் பல்வேறு கோணங் களில் விசாரணையை துரி தப்படுத்தி மாயமான சிறு மியை உயிருடன் மீட்டு பெற்றோரிடம் ஒப்ப டைக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண் டார்.



மன்னார்குடி சட்டமன்ற தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம் சோனா பேட்டை பகுதியை சேர்ந்த பிரவீன் சித்திரவேல் ஸ்காட்லாந்தில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டியில் மும்முறை தாண்டுதலில் (Triple jump) வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார். வெள்ளிப் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரரை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி அவரை நேரில் சந்தித்து பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் கவியரசு, கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.